# யோவான் ஸ்நானகன் மனம் திரும்பும்படி மக்களை அழைத்தான்

**சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் R3b யை வாசிக்கவும்.**

**ஜெபம்:** "பரலோகத்தில் இருக்கும் அன்பான பிதாவே, பாவிகளை மனந்திரும்பி இயேசுவினிடத்தில் வர உதவி செய்த யோவான் ஸ்நானகனைப் போலிருக்க எங்களுக்கு உதவி செய்யும். பாவத்துக்குள் அலைந்து வீழ்ந்த விசுவாசிகளை மென்மையாகத் திருப்பவும் உதவி செய்வீராக."

## 1. தேவ வார்த்தையைக் கொண்டு உங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்துக.

பல்லாயிரக் கணக்கான மக்களை மனம் திரும்புதலுக்குள் யோவான் ஸ்நானகன் எவ்வாறு கொண்டு வந்தான் என்பதை லூக்.3:1-18ல் காண்க.

- தங்களை நல்லவர்கள் என்று நினைத்து. ஞானஸ்நானம் பெற வந்த மக்களிடம் யோவான் என்ன கூறினான்?
- பாவங்களை அறிக்கையிட வந்த மக்களுக்கு யோவான் ஸ்நானகன் என்ன செய்தான்?



லூக்கா 15:1-10ல் உள்ள காணமற்போன ஆட்டைப் பற்றிய உவமையில் பரலோகத்தில் தேவதூதர்கள் ஏன் களிகூர்ந்தார்கள் என்பதைக் **காண்க.**

சில மேய்ப்பர்கள் கடிந்து, மிரட்டி மனந்திரும்பும்படி பாவிகளை வற்புறுத்துகின்றனர். ஆனால் இந்தக் கதையில் நாம் செய்ய வேண்டும் என்று இயேசு விரும்பும் சிறப்பான வழியை விளக்குகிறார்.

- காணாமற்போன ஒர் ஆட்டுக்குட்டி என்று உங்களை நீங்கள் எண்ணிக்கொள்ளுங்கள். ஆனால் நல்ல மேய்ப்பன் உங்களைக் கண்டு பிடித்து விட்டார்.



- அவர் மென்மையாக உங்களைத் தமது கரத்தில் ஏந்திக் கொண்டு, மந்தையாகிய தமது மக்களிடம் கொண்டு போய் விடுகிறார்.
- அவர் கடிந்து தண்டிப்பார் என்று பயந்தீர்கள். ஆனால் அவர் முகமோ அன்பையும் களிப்பையும் மட்டுமே காட்டுகிறது.
- இப்போதோ அல்லது வேறெப்போதோ நாம் அனைவருமே தவறிவிடக் கூடியவர்கள்தான். ஆனால் காணமாற்போன ஆடு இயேசுவுக்கு விலைமதிக்க முடியாதது ஆகும்.
- தவறிய ஆட்டை கண்டு பிடித்து திரும்பவும் கொண்டு வரும்வரை, மேய்ப்பன் மற்ற ஆடுகளைப் பற்றி கவலைப் படுவதைவிட்டு விடுகிறார்.
- நாம் வழிதப்பிப் போனாலும் இயேசு நம்மை நேசிக்கிறார். அவர் நம்மை மிகவும் நேசித்ததால் நமக்காக மரித்தார். ரோமர் 5:8.

- பாவிகளை மனம்திரும்ப அழைப்பதற்கும், அலைந்துதிரியும் விசுவாசிகளைத் திரும்ப கொண்டு வருவதற்கும் முக்கியமான அடிப்படை அவர்கள் மேல் அன்பு செலுத்துவதே – நாம் எடுக்க வேண்டிய ஒழுங்கு நடவடிக்கை அல்ல.
- ஒரு குழந்தையைக் கோபத்தோடு கண்டித்தால் அது கோபத்தோடு தன் பதில் உணர்வை வெளிப்படுத்தும். அன்போடு திருத்தினால் அது கற்றுக்கொள்ளும்.
- மந்தையின் ஒர் உறுப்பினர் வழிவிலகிப் போனால், உங்கள் நோக்கம் அவரைத் திருப்பிக் கொண்டு வருவதுதானே தவிர தண்டிப்பது அல்ல.
- கலாத்தியர் 6:1 ல் அப்போஸ்தலர் பவுல் கூறினார். "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள். நீயும் சோதிக்கப் படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு"
- சில சமயம் சிலரைத் திரும்பிக் கொண்டு வர தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும். ஆனால் எப்போதும் நாம் அதை அன்போடு செய்ய வேண்டும்.

**2. இந்த வாரத்தில் செய்ய வேண்டிய வேலைகளை உடன் ஊழியர்களுடன் கலந்து ஆலோசிக்கவும்.**

இயேசு தேவைப்படும் நண்பர்களை சந்தித்து, தேவன் அவர்களை நேசிக்கிறார், அவர்களது பாவங்களை மன்னிப்பார், உண்மையான பரிசுத்தத்தையும் மகிழ்ச்சியையும் புதிய நித்திய வாழ்வையும் கொண்டுவர விரும்புகிறார் என்பதை எல்லாம் எடுத்தோதி **விளக்கவும்.**

வழிவிலகிப் போன எந்த ஒரு விசுவாசியையும் **சந்தியுங்கள்.** கலா. 6:1 கூறுவது போல அவர்களை சீர்ப்படுத்துங்கள்.

- அன்போடு, அவர்களது மனமாற்றத்தை நினைவு கூர உதவவும்.
- அவர்களது பாவத்தன்மையை தேவன் உணர்த்த அனுமதிப்பார்களா என்பதை அறிந்து கொள்ள முயலுங்கள்.
- அவர்கள் தேவனின் மகா பெரிய அன்பைப் புரிந்து கொண்டார்களா என்பதை உய்த்தறிய முயற்சி செய்யவும்.
- அவர்களது வாழ்க்கையை மாற்றி அமைக்க அவர்களோடு அமர்ந்து தேவனிடம் வேண்டிக் கொள்ளவும்.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் கலந்தாலோசிக்கவும**

தற்போதைய தேவைகளுக்கும் வட்டார சம்பிரதாயங்களுக்கும் ஏற்ற நடவடிக்கைகளை தேர்ந்து கொள்க.

லூக். 3:1-18 லிருந்து யோவான் ஸ்நானகனின் கதையை **சொல்லவும் அல்லது நடிக்கவும்.** பகுதி 1 ல் நீங்கள் அறிந்து கொண்டதைப் பற்றி கேள்விகள் கேட்கவும்.

காணாமற்போன ஆட்டைப் பற்றிய உவமையை **சொல்லவும் அல்லது நடித்துக் காட்டவும்.** மக்களை மனம் திரும்பும் படி அழைக்கவும், வழி தப்பிய ஆட்டுக்குட்டியை திருத்தவும் இயேசு நமக்குக் கூறும் வழி வகையை பகுதி 1 லிருந்து விளக்கவும்.

இரட்சிப்பிற்காக மனிதர்கள் செய்ய வேண்டியதையும், தேவன் செய்வதையும் **விளக்குக:**

- ஒருவன் மனம் திருந்த வேண்டும். அதாவது இருதயத்தில் மாற்றம், தேவனிடம் விசுவாசம். (யோவான் 3:1-8).
- தேவன் விசுவாசிகளாகிய நம்மை மன்னிக்கிறார்; தமது குழந்தைகளாக முத்திரை இடுகிறார்; பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஆவிக்குரிய மறு பிறப்பை அளிக்கிறார் (எபே. 1:13-14).

யோவான் ஸ்நானகனிடம் மக்கள் வந்து தங்கள் பாவங்களை அறிக்கையிடுவது பற்றிய பகுதியான லூக் 3:4-7 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை ஆசரிக்கவும்.**

விசுவாசிகளாகிய நாம் கர்த்தரின் பந்தியை ஆசரிப்பதற்கு முன் இவ்வாறே செய்ய வேண்டும். நம்மை நாமே ஆராய்ந்து நமது பாவங்களை தேவனிடம் அறிக்கை இட வேண்டும். 1 கொரி. 11:28.

சகேயுவைப் பற்றிய நாடகத்தைப் **பிள்ளைகள்** நடிக்குமாறு செய்யவும். நாடகத்துக்கு பின் அவர்கள் கேட்க வேண்டிய கேள்விகளை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கலாம்.

நமது மறுபிறப்பில் மனிதனின் பங்கையும் தேவனின் பங்கையும் விளக்கலாம்.

- **நமது பங்கு :** மனம் திரும்புதல் (நம்மை தேவன் மன்னிப்பார் என்று நம்புதலும் இருதய மாற்றமும்), ரோமர் 12:2.
- **தேவனின் பங்கு :** நமக்குள் புதிய ஜீவனை வைத்து, அவரது குழந்தைகளாக நித்தியமாக முத்திரையிடுதல் (1 பேது. 1:3; எபே. 1:11-14).
- முதலில் யாக்கோபு 2:14-23 ஐ வாசித்து, பின் கேட்கவும்.
- யாக்கோபு குறிப்பிடும் இருவகையான விசுவாசம் எவை?
- **கேள்வி:** இருவகை விசுவாசத்திற்கும் இடையில் வித்தியாசம் உண்டாக்குவது என்ன *(தேவன் விரும்பும் விசுவாசத்தின் விளைவு மாறுதல் அடைந்த வாழ்க்கையும், நற்கிரியைகளுமே. மனம் திரும்புதலில் ஆரம்பிக்காத விசுவாசத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும். பேய்களும் விசுவாசித்து நடுங்குகின்றன என்று யாக்கோபு கூறுகிறார்).*
- **கவிதையை வாசிக்கவும் ஒரு புதிய மேய்ப்பனின் காதில் பிசாசு கிசுகிசுக்கிறது.**

பொய்யன் குறிபார்க்கிறான்; அம்பு பறக்கிறது!
அதன் விஷம் பொய்களை சுமக்கிறது!
இந்த அக்கினி அம்பின் செய்திதான் என்ன?
“கிறிஸ்து அவர்களின் இருதயத்தில் வாழ்கிறாரா
என்று கேளாதே!
சும்மா ஒரு பேச்சுக்காக கிருபையை உறுதி செய்! தேவ விதிகளை மறந்துவிடு!
கோயிலின் இருக்கைகளை நிறைப்பதற்காக
எதையாவது கூறு!
மனந்திரும்ப வேண்டுமென்றோ, பரலோகம்
அனுப்பியவரை அறிய வேண்டும் என்றோ
ஒரு போதும் கூறாதே!
புண்படுத்தாதே; கண்ணீர் வரும்படி பேசாதே!
தினவெடுக்கும் செவியை சந்தோஷம் அடையச் செய்!
வெற்று, கனியற்ற விசுவாசத்தை அளி
இதை நான் கூட தழுவிக் கொள்கிறேன்!”

தேவன் மனந்திரும்பும்படி எவ்வாறு உதவினார் என்று சாட்சி தரும்படி மக்களிடம் கேட்கவும்.

இதோ, ஒரு இளம் பெண்ணின் உதாரணம் “நான் ஒரு வருடமாக ஒரு குருவைப் பின்பற்றினேன். சமஸ்கிருதத்தில் பாடினேன். ஓர் ஆசிரமத்தில் வாழ்ந்தேன். நான் எனக்கான ஓர் எதார்த்தத்தை உருவாக்க உழைத்தேன். ஒரு நாள் நான் ஒரு பாவி என்பதையும் என்னை நானே இரட்சிக்க முடியாது என்பதையும் அறிந்தேன்.

அதே சமயத்தில் இயேசு என்னை நேசிக்கிறார் என்பதையும், அவரால் என்னை இரட்சிக்க முடியும் என்பதும் தெரிந்தது. அந்த சக்தியற்ற கடவுள்களை விட்டு விட்டேன். எனது அவ நம்பிக்கை என்ற பாவத்திற்காக மன்னிப்பு கேட்டேன் என் வாழ்க்கையை இயேசுவுக்கு அளித்தேன்.”

சேர்ந்து **மனனம் செய்க.** மாற்கு 1:5.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net